(உ) கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு.ஆர். சிங்காரம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

“காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 45,53,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்” என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-4-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.37 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

102. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமப்பொருட்கள் சலுகைகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து தொழில் துறையின் 28-2-1995-ஆம் நாளிட்ட 49-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1957-ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்று கனிமப் பொருட்கள் (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 28 (1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.